கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம் வேலூர். வேலூர் மாவட்டம்
ஐ.டி.எண்.01/2025

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 15-ஆம் தேதியில் திரு.ஐயப்பன் என்பவரின் மு.வி. வாக்குமூலம் (1908-ஆம் ஆண்டின் சட்டம் 10-வது கட்டளை மற்றும், தொழில் தகராறு சட்டம் 1947ன் படி) Bench Clerk Tmt. R. Deepika ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்யப்படுகிறது.

Solemnly affirmed in accordance with the provisions of Act 1873 on the day of 15.04.2026.

| | | |
|---|---|---|
| 1. பெயர் | : | ஐயப்பன் |
| 2. தந்தை பெயர் | : | தர்னாசிங் |
| 3. தொழில் | : | |
| 4. வயது | : | |
| 5. முகவரி | : | |

**முதல் விசாரணை**:-

தொழிலாளர் தரப்பு சாட்சி 2 என்னுடைய வழக்கிற்கு ஆதரவாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் காணப்படும் கையொப்பம் என்னுடையதுதான்.

**குறுக்கு விசாரணை**

நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் வேலை செய்கிறேன். என்னுடைய சம்பள ரசீதுகளை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய சம்பள ரசீதை பார்த்தால் என்னுடைய பணிநிலை, அடிப்படை சம்பளம் மற்றும் நான் பெறும் இதர சலுகைகள் பற்றிய விவரங்கள் தெரிய வரும் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் நிறுவனம் பிஸ்கட் தாயரிக்கும் நிறுவனம் என்றால் சரிதான். இந்த தொழிலில் ஈடுபடும் பணியாளர்களுக்கு அரசாங்கம் குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயம் செய்யும் என்றால் எனக்கு தெரியாது. அகவிலைப்படியை அரசாங்கம் நிர்ணயம் செய்யும் என்பது எனக்கு தெரியும். 65 நபர்களுக்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த 65 நபர்களின் பெயர் பட்டியல், அவர்களின் பணிநிலை மற்றும் அடிப்படை சம்பளம் ஆகிய விவரங்கள் எதையும் நான் என்

நிரூபண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். தொழிலாளர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்யும் பொழுது 100 நபர்களுக்காக வழக்கு தாக்கல் செய்வதாக கூறியுள்ளோம் என்றால் சரிதான். போன மாதம் நான் எவ்வளவு ஊதியம் பெற்றேன் என்பதை என் நிரூபண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். நான் தற்போதும் அங்கு தான் பணிபுரிகிறேன். வருடத்திற்கு ஒரு முறை நிர்வாகம் ஊதிய உயர்வு அளிக்கும் என்றால் சரிதான் ஆனால் நிர்வாகம் ரூபாய் 400 ஊதிய உயர்வாக எங்களுக்கு அளிக்கிறது அது குறைவான தொகை. எங்களது தொழிற்சாலையில் 6 தொழிற்சங்கங்கள் உள்ளன. இந்த தொழிற்சங்கங்கள் அனைத்தும் அரசியல் கட்சியை சார்ந்த தொழிற்சங்கங்கள் என்றால் சரிதான். 6 தொழிற்சங்கங்களில் 4 தொழிற்சங்கங்களுடன் நிர்வாகம் பேச்சுவார்த்தை நடத்தி ஒப்பந்தம் போட்டுள்ளது என்றால் சரிதான். கடைசியாக ஒப்பந்தம் போட்ட தேதி 28.08.2023 என்றால் சரிதான். அந்த ஒப்பந்தம் தற்போது அமலில் உள்ளது என்றால் சரிதான். அந்த ஒப்பந்தத்தில் எங்களுக்கு உடன்பாடு இல்லை என்றால் சரிதான். நான் குறிப்பிட்ட 65 நபர்களில் வெவ்வேறு தேதிகளில் வெவ்வேறு பணிநிலையில் பணிக்கு சேர்ந்து அவர்கள் பணிநிலைக்கு தக்கவாறு ஊதியம் பெறுகின்றனர் என்றால் சரிதான். எங்களுக்கு வழங்கப்படும் சம்பளம் அரசாங்கம் நிர்ணயித்த குறைந்தபட்ச ஊதியத்தை விட அதிகம் என்றால் சரியல்ல எங்களுக்கு நிர்வாகம் குறைந்த ஊதியம் தான் வழங்குகிறது. இந்த விவரங்களை தொழிலாளர் உதவிஆணையர் முன்பு போட்ட மனு, இந்த மனு மற்றும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். நான் கோரியுள்ள பரிகாரத்திற்கு எந்த வித அடிப்படையும் இல்லை என்றால் சரியல்ல. தொழிற்சங்கத்திற்கு இடையே உள்ள பாகுபாடு மற்றும் போட்டியின் காரணமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

S UMAMAHESWARI

Digitally signed by S UMAMAHESWARI
Date: 2026.04.15 16:19:47 +0530